தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

# 149 அடியை எட்டியது சேர்வலாறு அணை!



நீர்மட்டம் 83 அடியாக இருந்த கடனாநதி அணை. (வலது) நீர்மட்டம் 96 அடியாக இருந்த மணிமுத்தாறு அணை.

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் தொடர்ந்து பெய்து வரும் மழையால், சேர்வலாறு அணை நிரம்பும் நிலையில் உள்ளது. 156 அடி கொள்ளளவு கொண்ட இந்த அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை நிலவரப்படி 149 அடியை எட்டியது. பாப நாசம் அணை நீர்மட்டம் 133.50 அடியாக இருந்தது. திருநெல்வேலி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்த பலத்த மழையால் அணைகளின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக பாபநாசம் அணைப் பகுதியில் 26 மி.மீட்டர் மழை பதிவானது. தூத்துக்குடி மாவட்டத்தில் அதிகபட்சமாக தூத்துக்குடியில் 14.3 மி.மீட்டர் மழை பதிவானது. பாபநாசம் அணைக்கு நொடிக்கு 3,271 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு 2,455 கனஅடியும் நீர்வரத்து இருந்தது. பாபநாசம் அணையின் நீர்மட்டம் 2.5 அடி உயர்ந்து 133.50 அடியாகவும், சேர்வலாறு அணை நீர்மட்டம் 2 அடி உயர்ந்து 149 அடியாகவும் இருந்தது. மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 2 அடி

உயர்ந்து 96 அடியாக இருந்தது. 156 அடி கொள்ளளவை கொண்ட சேர்வலாறு அணையின் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு 150 அடி வரைதான் நீர் இருப்பு வைக்கப்படும். எனவே, திங்கள்கிழமை நீர்மட்டம் 150 அடியை எட்ட வாய்ப்புள்ளது. கடந்த 2010இல் வடகிழக்குப் பருவத்தில் பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணைகள் நிரம்பின.

அதன்பிறகு அணைகள் முழு கொள்ளளவை எட்டவில்லை. தற்போது பெய்த தொடர் மழையால் சேர்வலாறு அணை நிரம்பும் நிலை உள்ளது. 143 அடி கொள்ளளவு கொண்ட பாபநாசம் அணைக்கு தொடர்ந்து நீர்வரத்து இருப்பதால் ஒருசில தினங்களில் நிரம்பும் என எதிர்பார்க்கப் படுகிறது. பிற அணைகளின் நீர்மட்டம்: கடனாநதி அணை 83, ராமநதி அணை 83.50. இவ்விரு அணைகள் நிரம்பிய நிலையில் உபரிநீர் ஆற்றில் திறந்துவிடப்படுகிறது. கருப்பாநதி அணை 66.45, குண்டாறு அணை 36.10, அடவிநயினார் அணை 100.50, வடக்குப் பச்சையாறு அணை 32, நம்பியாறு அணை நீர்மட்டம் 23, கொடுமுடியாறு அணை 52.50.

மணிமுத்தாறு அருவியில் 3ஆவது நாளாக ஞாயிற்றுக்கிழமையும் வெள்ளம் நீடித்ததால் சுற்றுலாப் பயணிகள் செல்ல அனுமதிக்கப் படவில்லை. பாபநாசம் பாணதீர்த்த அருவியில் வெள்ளம் இருந்தது. அகஸ்தியர் அருவியில் நீர்வரத்து அதிகமாக இருந்தது.

## வைகை அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

முல்லைப் பெரியாறு அணையில் இருந்து கூடுதல் தண்ணீர் திறந்து விடப்பட்டதையடுத்து வைகை அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. தேனி மாவட்டத்தில், கடந்த சில நாள்களாக போதிய மழை இல்லாததால் கடந்த நவம்பர் 21-ஆம் தேதி முதல் வைகை அணைக்கு நீர் வரத்து குறைந்து, 168 கன அடி மட்டுமே நீர் வரத்து இருந்தது. இந்நிலையில் கடந்த நவம்பர் 21-இல் முல்லைப்பெரியாறு அணை நீர்மட்டம் 142 அடியை எட்டியது. இதையடுத்து முல்லைப்பெரியாறு அணையிலிருந்து

2100 கன அடி தண்ணீர் தமிழக பகுதிக்கு வெளியேற்றப்படுகிறது. இதனால் வைகை அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.

**அணைகளின் நீர் மட்டம்:**

**முல்லைப் பெரியாறு:**141.25 அடி(152), நீர்வரத்து:1005 கன அடி, நீர் வெளியேற்றம்:2100 கன அடி

**வைகை அணை: நீர்மட்டம்:** 42.95 அடி(71), நீர்வரத்து:2058 கன அடி, நீர் வெளியேற்றம்: 3060 கன அடி

<u>**விவசாயிகளுக்கு தானிய சேமிப்புப் பயிற்சி**</u>

விவசாயிகளுக்கு விஞ்ஞான முறையிலான தானிய சேமிப்பு குறித்த பயிற்சி முகாம் உடுமலையில் சனிக்கிழமை நடைபெற்றது. உடுமலை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நடைபெற்ற இப்பயிற்சி முகாமிற்கு தலைமை வகித்து வேளாண்மை உதவி இயக்குநர் கரு.சாத்தப்பன் பேசியது: தேங்காய், மக்காச்சோளம், கொண்டைக்கடலை பயிர்களை காயவைத்து, பதப்படுத்தி, தரம் பிரித்து அறுவடை முதல் விற்பனை வரை நவீன முறையை கடைப்பிடிக்க வேண்டும். அவற்றை மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்களாக விற்பனை செய்வதன் மூலமாக விவசாயிகளுக்கு கூடுதல் லாபம் கிடைக்கும் என்றார். இதில், சந்தை குறித்த தகவல்கள், அக்மார்க் தர நிர்ணயம், உணவுக் கலப்படம், அது தொடர்பான சட்டங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் மு.வே.சந்திரசேகர் பேசியது: தானிய வகைகளை சேமித்து வைக்கும்போது மாதம் ஒருமுறை தவறாமல் வெயிலில் காயவைத்து, பின்னர் சேமிப்பது அவசியம். ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விவசாயிகளுக்கு பல்வேறு சேவைகள் மூலம் நல்ல விலை, அதிக லாபம் கிடைப்பதுடன், உலர்களம், கிடங்கு வசதிகளும், அவசரத் தேவைக்கு பொருளீட்டுக் கடனும் வழங்கப்படுகிறது என்றார். வேளாண்

பொறியியல் துறை உதவிப் பொறியாளர் ராமசுப்பு பேசுகையில், கிணறு, ஆழ்துளைக் கிணறு ஆகியவற்றில் சூரிய ஒளி சக்தியினால் இயங்கக் கூடிய மோட்டார் அமைக்க 80 சதவீதம் மானியம் வழங்கப்படும். இதை அமைப்பதன் மூலமாக மின்வெட்டு ஏற்பட்டாலும் விவசாயத்துக்கு தங்கு தடையின்றி நிலத்தடி நீரைப் பயன்படுத்தலாம் என்றார். உதவி வேளாண்மை அலுவலர் முருகானந்தம் நன்றி கூறினார்.

## பொன்மலையில் 5.20 மி.மீ. மழை

திருச்சி பொன்மலை பகுதியில் 5.20 மி.மீ. மழைபதிவாகியுள்ளது. அரபிக் கடலில் நிலைகொண்டிருந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக மாநிலத்தில் கடந்த 2நாள்களாக மழை பெய்தது. திருச்சி மாநகரில் சனிக்கிழமை பிற்பகலில் சுமார் அரை மணி நேரத்துக்கும் மேலாக மழை பெய்தது. இதுபோல, புறநகர்ப் பகுதிகளிலும் குறிப்பிடதகுந்தளவில் மழை பெய்துள்ளது. ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் மாவட்டத்தின் மழையளவு விவரம் (மி.மீட்டரில்): பொன்மலை - 5.20, சமயபுரம் -5, புள்ளம்பாடி -4.20, நந்தியாற்றுத் தலைப்பு- 3, லால்குடி - 3, திருச்சி விமான நிலையம் - 2.90, திருச்சி டவுன் - 2.20. மாவட்டத்தில் மொத்தமாக 25.50 மி.மீ. மழையும், சராசரியாக 1.20 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

## தென்னை மரம் ஏறும் பயிற்சி முடித்தவர்களுக்கு கருவிகள்

நாகை மாவட்டம், வேதாரண்யத்தை அடுத்த தேத்தாக்குடி வடக்கு ஊராட்சியில் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் தென்னை மரம் ஏறும் பயிற்சி அளிக்கப்பட்ட 4 பெண்கள் உள்பட 20 பேருக்கு மரம் ஏறும் கருவிகள் ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன. தேத்தாக்குடி வடக்கில் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் தென்னை நடவு, பராமரிப்பு குறித்த 6 நாள் பயிற்சி முகாம்

நடத்தப்பட்டது. நாள்தோறும் நடவு பணி, பூச்சி நோய்க் கட்டுப்பாடு, உர மேலாண்மை குறித்து வேளாண்துறை மற்றும் தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் பயிற்சியளித்தனர். அத்துடன் தென்னை மரம் ஏறுவதற்கென வடிவமைக்கப்பட்ட கருவியை பயன்படுத்தி தென்னை மரம் ஏறுவது குறித்து 4 பெண்கள் உள்பட 20 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டது. இவர்களுக்கு ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் இலவசமாக கருவிகள், சான்றிதழ் வழங்கப்பட்டன. நிகழ்ச்சிக்கு தேத்தாக்குடி வடக்கு ஊராட்சித் தலைவர் ஆர். கிரிதரன் தலைமை வகித்து, கருவிகளை வழங்கினார். ஊராட்சி ஒன்றியக் குழு முன்னாள் உறுப்பினர் சுந்தரம்பாள் முன்னிலை வகித்தார்.

## மக்காச்சோள சாகுபடி விவசாயிகள் கவனத்துக்கு

பெரம்பலூர் மாவட்டத்தில் சாகுபடி செய்துள்ள மக்காசோளத்தில் நுண்ணூட்டச் சத்துக் குறைகளைக் களைய வேண்டும் என்றார் ரோவர் வேளாண் அறிவியல் மைய ஒருங்கிணைப்பாளர் (பொ) ப. விஜயலட்சுமி. இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: பெரம்பலூர் மாவட்டத்தில் மானாவாரி பயிராக அதிகளவில் மக்காச்சோளம் பயிரிடப்படுகிறது. நிகழாண்டு 35,035 ஹெக்டேரில் பயிரிடப்பட்டுள்ளதில், முன்பட்ட விதையாக சுமார் 20 ஆயிரம் ஹெக்டேரும், பின்பட்ட விதைப்பாக 1,500 ஹெக்டேரும் உள்ளது. தற்போது பின்பட்ட விதைப்பில் பயிரிட்டுள்ள மக்காச்சோளமானது 35 முதல் 45 நாள்கள் வயதுடைய பயிராக உள்ளதால், பெரும்பாலான வயல்களில் பேரூட்டச்சத்து மற்றும் நுண்ணூட்டச்சத்து குறை ஆங்காங்கே தென்படுகிறது. இதனால், மக்காச்சோள இலைகளின் ஓரங்கள் காய்ந்து விடுவது, இலை உருவாவது போன்ற அறிகுறிகளைப் பார்த்தால், ஊட்டச்சத்து பற்றாக்குறை இருப்பதை அறியலாம். இதைக் கட்டுப்படுத்த, ஆல் 19 உரத்தை 10 லிட்டர் தண்ணீருக்கு 100 கிராம் என்ற விகிதத்திலும், நுண்ணூட்ட உரக்கலவை 50 கிராம் 10 லிட்டர்

தண்ணீருக்கு என்ற விகிதத்திலும் கலந்து, இலைவழியாக தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கூட்டுறவு சங்கத்தில் யூரியா வினியோகம்**

மீஞ்சூர்: கூட்டுறவு சங்கத்தில், விவசாயிகளுக்கு முறையாக யூரியா வினியோகம் செய்யப்படுகிறதா? என, வேளாண் அதிகாரிகள் திடீர் ஆய்வு செய்தனர். மீஞ்சூர் ஒன்றியம், தேவதானம் பகுதியைச் சேர்ந்த விவசாயிகளுக்கு, யூரியா கிடைக்காமல் இருந்தனர். அதை தொடர்ந்து, அப்பகுதி விவசாயிகளுக்கு திருத்தணியில் இருந்து, 17 டன் யூரியா வரவழைக்கப்பட்டது.அவற்றை, தேவதானம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மூலம், விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.அதை, தேவதானம் பகுதியைச் சேர்ந்த, 170 விவசாயிகளுக்கு, தலா இரண்டு மூட்டைகள் வீதம், வினியோகம் செய்யப்பட்டன.தொடக்க வேளாண் சங்கங்கள் மூலம், விவசாயிகளுக்கு முறையாக யூரியா வினியோகம் செய்யப்படுகிறதா என, மாவட்ட வேளாண் இணை இயக்குனர் சவுந்திரராஜன், மீஞ்சூர் ஒன்றிய உதவி இயக்குனர் ரேவதி ஆகியோர், நேற்று திடீர் ஆய்வு செய்தனர். தனியார் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக மேலும், 87 டன் யூரியா வினியோகம் செய்யப்பட உள்ளதாக, வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

**3,800 டன் யூரியா வரவழைப்பு: ஆட்சியர் தகவல்**

திருவள்ளூர்: திருவள்ளூர் மாவட்ட விவசாயிகளுக்கு வழங்க, 3,800 டன் யூரியா வரவழைக்கப்பட்டு, வினியோகம் செய்யப்படுவதாக, மாவட்ட

ஆட்சியர் வீர ராகவ ராவ் கூறினார். திருவள்ளூர் மாவட்டத்தில் திருநின்றவூர், பெரியபாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் வழங்கும் சங்கம் மற்றும் உரக் கிடங்குகளில், ஆட்சியர் வீர ராகவ ராவ், நேற்று திடீர் ஆய்வு செய்தார். உரங்கள் வழங்குவதை கேட்டறிந்த பின், ஆட்சியர் கூறுகையில், "மாவட்டத்தில், சம்பா பயிரிடப்பட்டு மேலுரம் இடும் தருவாயில் உள்ளது. இதற்கு தேவையாக, 3,200 டன் யூரியா தேவைப்படுகிறது. இதைக் கருத்தில் கொண்டு, 3,800 டன் யூரியா வரவழைக்கப்பட்டு, விவசாயிகளுக்கு வினியோகிக்கப்பட்டு வருகிறது," என்றார். வேளாண் இணை இயக்குநர் சுந்தர்ராஜன், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணை பதிவாளர் செந்தில்குமார் மற்றும் பலர் உடனிருந்தனர்.

## காய்கறி, பூக்கள் உற்பத்தியில் செஞ்சி விவசாயிகள் ஆர்வம்

செஞ்சி: நெல், கரும்பு பயிர் செய்வதில் சிரமங்கள் உள்ளதால், செஞ்சி பகுதி விவசாயிகள் பூ மற்றும் காய்கறி சாகுபடிக்கு மாறி உள்ளனர். செஞ்சி பகுதியில் நெல், கரும்பு பயிர்கள் சாகுபடியில் முதலிடத்தில் உள்ளது. அடுத்து வேர்கடலை சாகுபடி செய்கின்றனர். சில ஆண்டு களாக நெல், கரும்பு, வேர்கடலை பயிர்களை சாகுபடி செய்ய விவசாயிகள் பல பிரச்னைகளை சந்தித்து வருகின்றனர். ஊரக வேலை உறுதி திட்டம் துவங்கப்பட்ட பிறகு நடவு, களை எடுப்பு பணிக்கு பெண்கள் வருவது வெகுவாக குறைந்தது. சில ஆண்டுகளாக மழையின்றி நெல் பயிர் சாகுபடி செய்ய கிணற்றில் போதிய தண்ணீர் கிடைப்ப தில்லை. இதனால் மாற்று பயிரான கத்தரி, வெண்டை, புடலங்காய், பீர்க்கன் உள்ளிட்ட காய்கறிகள், சாமந்தி, ரோஜா, கோழிக்கொண்டை உள்ளிட்ட பூ ரகங்களையும் பயிரிடுகின்றனர். இந்த பயிர்களிலும் தண்ணீர் பற்றாக்குறையின்றி சொட்டு நீர் பாசனம் மூலம் நடவு செய்கின்றனர். விளை நிலங்களை தரிசாக விடாமல் மாற்று பயிருக்கு

மாறி இருக்கும் விவசாயிகளால் செஞ்சி பகுதியில் காய்கறி மற்றும் பூக்களின் வரத்து அதிகரித்து வருகிறது.

## அவலூர்பேட்டையில் விவசாய பணிகள் மும்முரம்

அவலூர்பேட்டை: அவலூர்பேட்டை பகுதியில் விவசாய பணிகள் மும்முரமாக நடந்து வருகிறது. மேல்மலையனூர் ஒன்றியத்தில் உள்ள கிராமபகுதிகளில் சில மாதங்களுக்கு முன் தண்ணீர் பற்றாக் குறை ஏற்பட்டது. தற்போது பெய்த மழையால் சில இடங்களில் ஓரளவிற்கு தண்ணீர் வந்தது. இதை தொடர்ந்து விவசாயிகள் நிலங்களில் நெல் நாற்று விட்டனர், இதை முடிச்சுகளாக கட்டும் பணியிலும், நாற்று நடும் பணிகளிலும் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். மணிலா விதைப்பு செய்த நிலங்களில் களை எடுக்கும் பணியும் நடக்கிறது. இதே போல் , நெல் அறுவடை செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## ரூ. 50 லட்சம் மஞ்சள் ஏலம்

ஆத்தூர் : ஆத்தூர், வேளாண்மை உற்பத்தியாளர்கள், கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நடந்த ஏலத்தில், 1, 400 மூட்டை மஞ்சள், 50 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள், கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று முன்தினம் நடந்த, மஞ்சள் ஏலத்தில், திருவண்ணாமலை, கடலூர், நைனார்பாளையம், கள்ளக்குறிச்சி, சின்னசேலம், பெரம்பலூர் மற்றும் ஆத்தூர், அதன் சுற்றுவட்டார கிராம பகுதியைச் சேர்ந்த, 120 விவசாயிகள் விளைவித்த, 1, 400 மூட்டை மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.விரலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம் 5, 009 ரூபாய், அதிகபட்சம் 7, 559 ரூபாய், உருண்டை மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம் 4, 500 ரூபாய், அதிகபட்சம் 6, 700 ரூபாய்க்கு விற்பனையானது.ஏலத்தில், 10 வியாபாரிகள் கலந்து கொண்டு, 1, 400 மூட்டை மஞ்சளை, 50 லட்சம் ரூபாய்க்கு வாங்கி சென்றனர்.

## குறு வள மையப் பயிற்சி

நாமக்கல் : மோகனூரில், தொடக்க மற்றும் உயர் தொடக்கக் கல்வி ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. நாமக்கல் தாலுகா, மோகனூர் வட்டார மையத்திற்கு உட்பட்ட குறுவள மையங்களில், துவக்க மற்றும் உயர் தொடக்கக் கல்வி ஆசிரியர்களுக்கு, பயிற்சியின் தாக்கம் என்ற தலைப்பில், நடப்பு கல்வியாண்டுக்கான பயிற்சி மற்றும் கலந்துரை யாடல் நிகழ்ச்சி நடந்தது.இதில், 137 தொடக்கப்பள்ளி ஆசிரியர், 48 உயர் தொடக்க நிலை ஆசிரியர் பங்கேற்றனர். பயிற்சி மேற்பார்வை யாளர் சாந்தி, ஆசிரியர் பயிற்றுனர் சோபனா, சீலத்பேகம், கவிதாமணி, நடேசன், பெரியசாமி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## தர்மபுரியில் தோட்டக்கலைத்துறை சார்பாக ரூ.4.28 கோடி மதிப்பில் சாகுபடி திட்டங்கள்

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை சார்பில், செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து, டி.ஆர்.ஓ., சங்கர் பார்வையிட்டார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது: தர்மபுரி மாவட்டத்தில், தோட்டக்கலைப் பயிர்கள், 80 ஆயிரம் ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. நடப்பாண்டு, தேசிய தோட்டக்கலை இயக்க திட்டம் மூலம், 4 கோடியே, 28 லட்ச ரூபாய் மதிப்பில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ், தர்மபுரி மாவட்டத்தில் பந்தல் காய்கறிகளான பாகற்காய், புடலங்காய், பீர்க்கங்காய் சாகுபடியை ஊக்குவிக்க, 50 சதவீதம் மானியமும், துல்லிய பண்ணை திட்டம் மூலமாக மொத்தம், 304 ஹெக்டரில், 80 லட்சத்து, 80 ஆயிரம் ரூபாய் மதிப்பில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தர்மபுரியை அடுத்த, அதகபாடியில், மாது என்ற விவசாயி, பசுமை குடில் அமைத்து, தரமான நாற்றுகள் உற்பத்தி செய்து, ஒவ்வொரு நாற்றும், 50 பைசாவிற்கு

விற்பனை செய்து வருகிறார். இவர், 500 சதுர மீட்டர் பரப்பளவில், ஒரு லட்சத்து, 50 ஆயிரம் ரூபாய் மதிப்பில், விதை பண்ணை அமைத்தார். இவருக்கு தோட்டக்கலைத்துறை சார்பாக, 75 ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. காரிமங்கலம் ஒன்றியம், மூக்கனூரை சேர்ந்த வேடியப்பன் என்பவர், 4,000 சதுர மீட்டரில், தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழ், உயர் தொழில்நுட்ப பசுமை இல்லம் அமைத்து, குடமிளகாய் சாகுபடி செய்து வருகிறார். பசுமை இல்லம் அமைக்க, மொத்த மதிப்பான, 37 லட்சத்து, 40 ஆயிரம் ரூபாயில், அரசு, 18 லட்சத்து, 70 ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கி உள்ளது. நவீன குடமிளகாய் சாகுபடி மூலம், வேடியப்பனுக்கு, ஆண்டுக்கு, 10 லட்சம் ரூபாய் வரை நிகர லாபம் கிடைக்கிறது. இவ்வாறு அவர் கூறினார். இணை இயக்குனர் மோகன், துணை இயக்குனர்கள் வேணுகோபால், வெங்கடேசன், பாஸ்கரன், சுசிலா, வேளாண் பொறியியல் உதவி செயற்பொறியாளர் முருகேசன், தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் ராஜேந்திரன், உதவிப்பொறியாளர்கள் பிரசன்னா, அறிவழகன், சுப்பிரமணியன் ஆகியோர் உடனிருந்தனர்.

## நவ., 28ல் வேளாண் குறைதீர் கூட்டம்

ஈரோடு : வேளாண் குறைதீர் கூட்டம், வரும் 28ம் தேதி, கலெக்டர் அலுவலகத்தில், கலெக்டர் பிரபாகரன் தலைமையில் நடக்கிறது.அன்று காலை, 11 முதல், 11.30 மணி வரை குறைகள், கோரிக்கை குறித்த மனு வழங்குதல், 11.30 முதல், 12.30 மணி வரை விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயம் தொடர்பான பிரச்னைகளை கூறுதலும், மதியம், 12.30 மணி முதல் அதிகாரிகள் விளக்கம் அளிக்கின்றனர். விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் பங்கேற்க, கலெக்டர் பிரபாகரன் அழைப்பு விடுத்துள்ளார்.

**<u>வாழையை தாக்கும் வண்டு பூச்சி கட்டுப்படுத்த வேளாண் துறை அறிவுரை</u>**

தஞ்சாவூர்: " வாழையை தாக்கும் பூச்சிகள் மற்றும் நோய் களை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் பற்றி," தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி விளக்கமளித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: வாழையை தாக்கும் பூச்சிகளில் மிக முக்கியமானது கிழங்குவண்டு, கூண்வண்டு, அசுவிணி பூச்சி மற்றும் நூற்புழு.கிழங்குவண்டு தாக்குதலை கட்டுப்படுத்த, 1.3 சதவீத லிண்டேன் குருணை, 20 கிராம் அல்லது கார்பரில், 10 சதவீத தூள், 20 கிராம், இவற்றில் ஏதேனும் ஒன்றை மரத்தை சுற்றி மண்ணில் இடவேண்டும். அசுவிணிபூச்சி முடிகொத்து நோயை பரப்புகிறது. இதனால் வாழை இலை விரிந்து வளராமல், சிறுத்துப்போய் சுருங்கி, கொத்துப்போல் காணப்படும். இப்பூச்சியை கட்டுப்படுத்த பாஸ்போமிடான், ஒரு மி.லி., மருத்து அல்லது மீதைல் டெமெட்டான் ஒரு மி.லி., மருந்து அல்லது மானோ குரோட்டோபாஸ், ஒரு மி.லி., மருந்து, இவற்றில் ஏதேனும் ஒன்றை, ஒரு லிட்டர் நீரில் கலந்து, மூன்று முறை, 21 நாள் இடைவெளியில் தெளித்தல் வேண்டும். கூண்வண்டு தாக்கு தலை கட்டுப்படுத்த, காய்ந்த சருகுகளை அகற்றி, தேவையற்ற கீழ்கன்றுகளை அகற்றி விட வேண்டும். வாழை இலை இடுக்குகளில் கார்போபியூரான், 3ஜி மருந்துடன் சம அளவு மணல் சேர்த்து இடுதல் வேண்டும் அல்லது மனோ குரோட்டோபாஸ், இரண்டு மி.லி., மருந்தை, ஒரு லிட்டர் நீரில் கலந்து, அரை மி.லி., சோப்பு கரைசலை சேர்த்து, தண்டின் மேல் தெளிக்க வேண்டும். நூற்புழுவை கட்டுப்படுத்த கார்போபியூரான், 3ஜி மருந்தை கிழங்கில் தூவி நடுதல் வேண்டும். வாடல் நோய் தாக்குதலை கட்டுப்படுத்த, விதை கன்றுகளில் தோலை சீவிய பின், பெவிஸ்டின் கரைசலில் மூழ்கி எடுத்து நட வேண்டும். மேலும், வாழைக்கன்று நட்ட, ஐந்து முதல், எட்டாவது

மாதங்களில் பெவிஸ்டின், இரண்டு சதவீத கரை சலை, மூன்று மி.லி., என்ற அளவில் கிழங்கும் தண்டும் சேரும் இடத்தில், 10 செ.மீ., துளையிட்டு ஊசிமூலம் செலுத்தி கட்டுப்படுத்தலாம். இலைப்புள்ளி நோயை கட்டுப்படுத்த, பாதிக்கப்பட்ட இலைகளை அகற்றி எரித்து விட வேண்டும். பெவிஸ்டின் ஒரு கிராம் அல்லது காலிக்ஸின், ஒரு மி.லி., மருந்தை, ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து அத்துடன் டீ பால், ஒட்டும் திரவம், ஐந்து மி.லி., சேர்த்து தெளிக்க வேண்டும், என்று தெரிவித்துள்ளார்.

## <u>திராட்சையில் "கலர்' கிடைக்க விவசாயிகளுக்கு ஆலோசனை</u>

கம்பம் : திராட்சையில் "கலர்' மற்றும் இனிப்புச் சுவை கூடுதலாக கிடைக்க விவசாயிகள் பின்பற்ற வேண்டிய தொழில்நுட்பம் குறித்து கம்பம் பள்ளத்தாக்கு திராட்சை ஆராய்ச்சி நிலைய தலைவர் பேராசிரியர் பார்த்திபன் விளக்கியுள்ளார். அவர் கூறியதாவது : உலகத்தில் ஆண்டு முழுவதும் திராட்சை கிடைக்கும் பகுதி என்ற பெருமையை கம்பம் பள்ளத்தாக்கு பெற்றுள்ளது. ஆண்டிற்கு மூன்று அறுவடை செய்யப்படும். திராட்சை விவசாயிகளின் தீராத பிரச்னையாக செவட்டை நோய் தாக்குதல் இருந்து வருகிறது. சமீபகாலங்களில் திராட்சைக்கு "கலர்' கிடைப்பதில் பிரச்னை ஏற்பட்டு வருகிறது. எனவே தர மேம்பாடு என்ற தலைப்பில் விவசாயிகளுக்கு ஆலோசனை கூட்டங்களை ஆராய்ச்சி நிலையம் நடத்தி வருகிறது.திராட்சையில் "கலர்' கிடைக்கவும், இனிப்பு சுவை அதிகமாக கிடைக்கவும் விவசாயிகளுக்கு ஆராய்ச்சி நிலையம் ஆலோசனைகளை வழங்கியுள்ளது. அதன்படி பிஞ்சு வைக்கும் சமயத்தில் அதாவது பட்டாணி சைசில் திராட்சை பழம் இருக்கும் போதும், பச்சை நிறத்தில் இருந்து கலர் மாறும் போதும் என இரண்டு சமயங்களில் விவசாயிகள் சல்பேட்டா பொட்டாஷ் உரத்தை ஒரு லிட்டர் தண்ணீரில் 5 கிராம் வீதம் கலந்து தெளிக்க வேண்டும். சல்பேட்டா பொட்டாசில் உள்ள

"சல்பர்' திராட்சையில் கலர் கிடைக்கவும், இனிப்பு சுவையை அதிகரிக்கவும் திறன் கொண்டது, என்றார்.

## விவசாய பணிகள் துவங்கியது தொழிலாளர்கள் மகிழ்ச்சி

தேவதானப்பட்டி : ஜெயமங்கலத்தில் மூன்று ஆண்டுகளுக்கு பிறகு முதல்போக நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதனால் விவசாய கூலித்தொழிலாளர்களுக்கு வேலை கிடைத்துள்ளதால் மகிழ்ச்சி யடைந்துள்ளனர். பெரியகுளம் தாலுகா வராகநதி நீரை ஆதாரமாக கொண்டு சில்வார்பட்டி சிறுகுளம், ஜெயமங்கலம் வேட்டுவன்குளம், நல்லகருப்பட்டி நாரணன்குளம், குள்ளப்புரம் பெரியகண்மாய், மருகால்பட்டி சிறுகளம், சிந்துவம்பட்டி ஓட்டக்குளம் உட்பட 15 க்கும் மேற்பட்ட கண்மாய்கள் நிரப்பப்படுகிறது. கடந்த 3 ஆண்டுகளாக பருவமழை பெய்யவில்லை. இதனால் நெல் சாகுபடி உட்பட இதர விவசாயப்பணிகளை விவசாயிகள் தவிர்த்து வந்தனர். இதனால் விவசாய கூலித்தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. மூன்று ஆண்டுகளுகஅகு பின் இந்த ஆண்டு விவசாய பணிகளுக்கு போதுமான மழை பெய்துள்ளது. இதனால் வராகநதியில் வெள்ளம் ஏற்பட்டு கண்மாய்கள் அனைத்தும் நிரம்பின. இதனால் 3 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நேரடி நெல்விதைப்பு பணியை செய்தனர். நெல்விதைப்பு செய்து 20 நாட்கள் முதல் 25 நாட்கள் வரை ஆன நிலையில் களை எடுப்பணி நடந்து வருகிறது. மூன்று ஆண்டுகளுக்கு பிறகு கூலித் தொழிலாளர்களுக்கு விவசாய பணிகள் கிடைத்துள்ளதால் மகிழ்ச்சியில் உள்ளனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பென்னாகரத்தில் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி**

பென்னாகரம், : பென்னாகரம் வட்டம் வேளாண்மை விரிவாக்கத் துணை இயக்கம் சார்பில் நரசிபுரம் கிராமத்தில் செயல்படும் மஞ்சள் விளைபொருள் குழு விவசாயிகளுக்கு தொ ழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண்மை அலுவலர் தினேஷ் தலை மை வகித்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சரவணன் கலந்துகொண்டு, விவசாயிகள் சாகுபடி செலவை குறைத்து அதிக மகசூல் பெற புதிய தொழில்நுட்பங்களான திருந்திய நெல் சாகுபடி, நீடித்த நிலையான கரும்பு சாகுபடி, துவரை நாற்று நடவு முறைகளை பயன்படுத்த வேண்டும் என்றார். மேலும் அவர் குழு செயல் படும் விதம் மற்றும் ஆவணங்கள் பராமரிப்பு குறித்து ஆய்வு செய்தார். இப்பயிற்சியில் உதவி வேளாண்மை அலுவலர்கள் ஏசுதாசன் மற்றும் பெரி யசாமி ஆகியோர் கலந்து கொண்டு மண் பரிசோதனை செய்வதன் அவசியம், ஊட்டமேற்றிய தொழுஉரம் தயாரிக்கும் முறை மற்றும் அதன் பயன்கள் குறித்து செயல்விளக்கம் அளித்தார். பயிற்சியில் உதவி வட்டார தொழில்நுட்ப மேலாளர் கணபதி மற்றும் ஜெயம் ஆகியோர் கலந்துகொண்டு சொட்டு நீர் பாசனம் மற்றும் பண்ணைக்குட்டைகள் அமைத்து பயன் பெற விவசாயிகளை கேட்டுக்கொண்டனர். விளை பொருள் குழு தலைவர் மகேந்திரன் நன்றி கூறினார்.

**விவசாயிகள் கொண்டாட்டம்**

வத்தலக்குண்டு, : முல்லைபெரியாறு அணை 142 அடி எட்டியதையடுத்து வத்தலக்குண்டுவில் விவசாயிகள் பட்டாசு வெடித்தும், இனிப்பு வழங்கியும் கொண்டாடினர். இந்நிகழ்ச்சிக்கு தமிழக விவசாயிகள்

கூட்டமைப்பு மாநில பொதுச்செயலாளர் ஏஎம்எஸ். இளங்கோவன் தலைமை வகித்தார். மாவட்ட கவுன்சிலர் அன்னகளஞ்சியம், கூட்டமைப்பின் மாநில சட்ட ஆலோசகர் பழனிக்குமார், மாநில பொருளாளர் சரவணன், இளைஞரணி செயலாளர் தங்கப்பாண்டி ஆகியோர் கலந்து கொண் டனர். இதுபற்றி இளங்கோவன் கூறுகையில், விவசாயிகளின் நீண்ட நாள் கனவு நிறைவேறியுள்ளது; இனி வரும் காலங்களில் விவசாயிகளின் வாழ்வு சிறப்பானதாக இருக்கும் என்று தெரிவித்தார்.

## விவசாயிகள் விதைப்பண்ணை அமைக்க வலியுறுத்தல்

சிவகங்கை, : சிவகங்கை மாவட்டத்தில் தற்போது நிலக்கடலை விதைப்பண்ணைகள் அமைத்து விவசாயிகள் பயனடையலாம் என விதைச்சான்று உதவி இயக்குநர் இளங்கோவன் அறிவுறுத்தியுள்ளார். இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில், சிவகங்கை மாவட்டத்தில் வடகிழக்கு பருவ மழையால் தற்போது நிலத்தில் போதிய ஈரம் உள்ளது. கார்த்திகை பட்டம் நிலக்கடலை பயிருக்கு சிறந்த காலம் ஆகும். இதை பயன்படுத்தி நிலக்கடலை பயிரில் விதைப்பண்ணைகள் அமைக்கலாம். இதற்கு தேவையான ஆதார விதைகளை வட்டார வேளாண் விரிவாக்க மையங்களில் பெற்றுக்கொள்ளலாம். டிஎம்வி 7இ, டிஎம்எவி(ஜிஎன்) 13இ மற்றும் விஆர்ஐ ரகங்களில் விதைப்பண்ணைகள் அமைக்கலாம். விதைப்பண்ணைகளை வட்டார வேளாண் அலுவலகங்களில் பதிவு செய்திட வேண்டும். விதைப்பண்ணைகள் அமைப்பதன் மூலம் விவசாயிகளுக்கு கூடுதல் மகசூல் கிடைக்கும். கலப்படம் இல்லாத விதைகளை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு அரசு பிரிமியம் மற்றும் மானியம் வழங்குகிறது. எனவே விவசாயிகள் நிலக்கடலை விதைப்பண்ணைகள் அமைக்க முன் வர வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வேலிக்கருவை மரங்களை முற்றிலும் ஒழிக்க ஓட்டப்பிடாரம் ஒன்றியத்தில் 10 கிராமங்கள் தத்தெடுப்பு விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் கலெக்டர் தகவல்

தூத்துக்குடி,: நிலத்தடி நீர்மட்டத்தை பாதிக்கும் வேலிக்கருவை மரங்களை முற்றிலும் ஒழிக்க ஓட்டப்பிடாரம் ஒன்றியத்தில் 10 கிராமங்கள் தத்தெடுக்கப்பட உள்ளது என விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் கலெக்டர் ரவிக்குமார் தெரிவித்தார். தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் ரவிக்குமார் தலைமையில் நடந்தது. டிஆர்ஓ முத்து, வேளாண்மை இணை இயக்குநர் தட்சிணாமூர்த்தி, தாமிரபரணி வடிநிலக் கோட்ட செயற்பொறியாளர் சுப்பிரமணியன், கூட்டுறவு சங்கங்களின் இணை இயக்குநர் ஜானகிராமன் உள்பட அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

## 2ம் போக நெல் சாகுபடியில் தரமான விதைகளை பயன்படுத்த அழைப்பு

கிருஷ்ணகிரி, : 2ம் போக நெல் சாகுபடியின் போது தரமான விதைகளை பயன்படுத்துமாறு கிருஷ்ணகிரி விதை பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் ஜெகதீசன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ளஅறிக்கை:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தற்போது 2ம் போக நெல் சாகுபடிக்கு கிருஷ்ணகிரி அணையின் மூலம் பாசனம் பெறம் பகுதிகளில் நெல் நாற்றங்கால் தயார் செய்யும் பணி நடந்து வருகிறது. விவசாயிகள் தரமான விதைகளை தேர்வு செய்து சாகுபடி மேற்கொள்ள வேண்டும். விதை விபர அட்டை யில் குறிப்பிட்டுள்ள விவரங்களை சரி பார்த்து விதை களை வாங்க வேண்டும். விதை விபர அட்டையில் காணப்படும் பயிரிட உகந்த பருவம் மற்றும் பயிரிட உகந்த மாநிலம் ஆகிய விவரங்களை சரி பார்க்க வேண்டும். கிருஷ்ணகிரி நகரில் செயல்பட்டு வரும் விதை பரிசோதனை நிலையத்திற்கு பணி விதை மாதிரிகளை அனுப்பி வைத்து, விதைகளின் தரத்தினை அறிந்து கொள்ளலாம். இந்நிலையத்தில் ஒரு பணி விதை மாதிரிக்கு பரிசோதனை கட்டணமாக

ரூ.30 செலுத்தி, விதைகளின் தரத்தினை அறிந்து, தரமான விதைகளை பயன்படுத்தி சாகுபடி மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு தனது அறிக்கையில் மூத்த வேளாண்மை அலுவலர் தெரிவித்துள்ளார்.

## <u>ஏரி, குளங்களுக்கு நீர்வரத்து அதிகரிப்பு</u>

மணமேல்குடி, : புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி பகுதியில் தொடர் மழை காரணமாக இங்குள்ள ஏரி, குளங்கள் நிரம்பி வருவதால் பொதுமக்களும் விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். புதுக் கோட்டை மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக மழை பெய்த போ தும், மணமேல்குடி பகு தியில் மட்டும் தேவையான அளவுக்கு பெரிய அளவில் மழை பெய்ய வில்லை. பருவ மழையைப் பயன்படுத்தி, வயலில் விதை விதைந்திருந்த விவசாயிகள் மழை பெய்யாததால் சோகத்துடன் இருந்து வந்தனர். இவர்களது வாட்டத்தைப் போக்கும் வகையில் கடந்த சில மணமேல்குடி பகுதியில் கன மழை பெய்து வருகிறது. கொட்டித் தீர்த்த கன மழையால் ஏரிகள், குளங்கள் உள்ளிட்ட நீர்நிலைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. மேலும், வயல்களிலும், வீடுகளில் உள்ள கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அதே சமயம், வீதிகளில் மழையால் பெருக்கெடுத்த தண்ணீர் வடிவதற்கான வசதி இல்லாமல் குட்டை யாக தேங்கி நிற்கிறது. இத னால் வாகன ஓட்டிகளும், பள்ளி, கல்லூரி செல்லும் மாணவ, மாணவிகளும் அவ்வழியாகச் செல்ல முடியாம ல் பெரிதும் சிரமப்பட்டனர். எனவே, அப்பகுதியில் வடி கால் வசதியை முறையாக ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

**காட்டுமன்னார்கோவில் அருகே நிரந்தர பூச்சி நோய் கண்காணிப்பு பணி தீவிரம்**

காட்டுமன்னார்கோவில், காட்டுமன்னார் கோவில் அருகே பெரும் பாலானோர் விவசாயிகள். இங்கு நெற்பயிர் அதிகம் பயிரிடப்படுகிறது. இந்த ஆண்டு நேரடி நெல் விதைப்பு அதிக பரப்பில் பயிரிடப்பட்டுள்ளது. நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்ட வயல்களில் அதிக அளவு களைகள் காணப்படும். இதை களை கொல்லிகள் மூலம் கட்டுபடுத்துவர். மேலும் வளர்ந்து வரும் நெற்பயிரில் பூச்சிகள் தாக்கம் காணப்படும். இவைகளை கட்டுப்படுத்த விவசாயிகள் பல்வேறு பூச்சி கொல்லி மருந்துகளை பயன்படுத்துவர். பூச்சி தாக்குதல் ஏற்பட்ட வயல்களில் அதிக அளவு பாதிப்பு ஏற்பட்டு மகசூல் குறைவாக கிடைக்கும். இதை கருத்தில் கொண்டு வேளாண்மை துறை சார்பில் ஒரு விவசாயியின் வயலை தேர்ந்தெடுத்து அதில் நெற்பயிர் வளர்ந்துள்ள குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட பரப்பில் நோய் தாக்கம் உள்ளதா, இதனால் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா, என்பதை அறிய செய்யும் பணியில் இந்த ஆண்டு ஈடுபட்டுள்ளனர். இதன்படி தெற்கிருப்பில் ராமலிங்கம் என்பவரின் வயலில் நிரந்தர பூச்சி நோய் கண்காணிப்பு திடலை ஏற்படுத்தி உள்ளனர். இந்த குறிப்பிட்ட பரப்பில் பூச்சி நோய் தாக்கம் ஏற்பட்டால் பொருளாதார சேதத்தின் அளவை கண்டறிவர் என கூறப்படுகிறது.

**மண்புழு உரம் தயாரிக்க விளக்கம்**

கோத்தகிரி, : கோத்த கிரி வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் உல்லத்தட்டியில் மண்புழு உரம் தயா ரிக்கும் முறைகள் பற்றிய செயல்முறை விளக்கம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஊர் தலைவர் குப்பன் தலைமை வகித்தார். தோட்டக்கலை ஆராய்ச்சி நிலை ய உதவி பேராசிரியர் ஜெய பால் கிருஷ்ணன் மண்புழு உரம் தயாரிக்கும் முறை குறித்து பேசினார். தொட ர்ந்து செயல்முறை விளக்கமும் காண்பிக்கப்பட் டது. உல்லத் தட்டி கிரா மத்தை சுற்றியுள்ள

விவசாயிகள் சுமார் 50ககும் மேற்பட்ட டோர் கலந்து கொண்டனர். முடிவில் உதவி மேலாண்மை அலு வலர் ராமன் நன்றி கூறினார்.

**<u>தஞ்சையில் இலவச காளான் வளர்ப்பு பயிற்சி நேர்முகத்தேர்வில் பங்கேற்க அழைப்பு</u>**

தஞ்சை, : தஞ்சையில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் கிராமிய சுய வேலை வாய்ப்பு பயிற்சி மையத்தில் இலவச காளான் வளர்ப்பு பயிற்சி வரும் 24ம் தேதி முதல் தொடங்க உள்ளது. பயிற்சியில் சேர விரும்புவோர் அன்று நடைபெறும் நேர்முகத்தேர்வில் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் கிராமிய சுயவேலை வாய்ப்பு பயிற்சி மையத்தின் இயக்குனர் ராஜருக்மாங்கதன் தெரிவித்துள்ளதாவது: நபார்டு நிதி உதவியுடன் 6 நாட்களுக்கு தின மும் காலை 9.45 மணி முதல் மாலை 5 மணி வரை பயிற்சி நடை பெறும். பயிற்சி காலத்தில் மதிய உணவு, தேவையான பயிற்சி பொரு ட்கள் அனை த்தும் பயிற்சி மையத்திலி ருந்து வழங்கப்படும். பயிற் சிக்கு எந்தவித கட்டணமும் செலு த்த தேவையில்லை. திறமை யான தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டு சிறப் பாக பயிற்சி அளிக்கப்படும். தொழில் தொடங்குவதற்கு ஆலோ சனை வழங்கப்படும். பயிற்சியில் கலந்து கொண்டு தகுதி பெறும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சியில் சேர விரும்புவோர் வரும் 24ம் தேதி காலை 9.30 மணிக்கு பயிற்சி மையத்தில் நடைபெறும் நேர்முகத் தேர்வில் கல்விச் சான்று, மாற்றுச் சான்று, ரேசன் கார்டு, வாக்காளர் அடை யாள அட்டை, 3 ஸ்டாம்ப் சைஸ் போட்டோவுடன் கலந்து கொள்ள வேண்டும். மேலும் விவரங்களுக்கு ஐ.ஓ.பி.கிராமிய சுயவேலைவாய்ப்பு பயிற்சி மையம், எண்.4, பக்கிரிசாமி வீதி, ரெட்டிப்பாளையம் ரோடு, ஈஸ்வரி நகர், மருத்துவக் கல்லூரி சாலை, தஞ்சாவூர் 613004 என்ற முகவரியிலோ அல்லது 04362242377 என்ற தொலைபேசி எண் ணிலோ

தொடர்பு கொள்ள லாம் என பயிற்சி மையத்தின் இயக்குனர் ராஜருக்மாங்கதன் தெரிவித்துள்ளார்.

**<u>நடுமரத்தில் குலை தள்ளிய அதிசயவாழை</u>**

திருக்காட்டுப்பள்ளி, : திருக்காட்டுப்பள்ளி அடுத்த விஷ்ணம் பேட்டையில் மரத்தின் நடுவில் குலை தள்ளிய வாழைமரத்தை பொதுமக்கள் மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்து சென்றனர். திருக்காட்டுப் பள்ளி அடுத்த விஷ்ணம்பேட்டை வேணுகோபாலசுவாமி கோயில் அர்ச்சகர் சீனிவாசபட்டாச்சாரியார். இவரது வீட்டின் கொல்லைப் புறத்தில் வாழைக்கன்றுகள் வளர்த்து வருகிறார். அதில் ஒரு வாழைமரம் நடுவில் இருந்து வாழைத்தார் போட்டுள்ளது. இதனை அப்பகுதி மக்கள் அதிசயத்துடன் பார்த்து சென்றனர்.

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு</u>**



மேட்டூர், காவிரி டெல்டா மாவட்டங்களின் பாசன நீர் ஆதாரமாக மேட்டூர் அணை திகழ்கிறது. காவிரி டெல்டா பகுதிகளில் கடந்த 2 நாட்களாக தொடர்ந்து மழை நீடித்து வருகிறது. இதைத்தொடர்ந்து அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்கும் அளவு நேற்று முன்தினம் வினாடிக்கு 2 ஆயிரத்து 700 கனஅடியாக குறைக்கப்பட்டது. இதில் வினாடிக்கு 2 ஆயிரம் கன அடி தண்ணீர் டெல்டா பாசனத்திற்கும், 700 கன அடி தண்ணீர் கால்வாய் பாசனத்திற்கும் திறக்கப்பட்டது.

அதே நேரத்தில் காவிரி நீர்பிடிப்பு பகுதிகளிலும் மழை பெய்து வருகிறது. இதன் எதிரொலியாக, நேற்று முன்தினம் அணைக்கு வினாடிக்கு 4 ஆயிரத்து 847 கன அடி நீர்வரத்து காணப்பட்ட நிலையில், நேற்று வினாடிக்கு 5 ஆயிரத்து 460 கன அடியாக தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. அப்போது அணையின் நீர்மட்டம் 103.11 அடியாக இருந்தது. காவிரி நீர் பிடிப்பு பகுதியில் மழை நீடிக்கும் பட்சத்தில் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

**காய்கறி நாற்றுகள் உற்பத்தி செய்ய 50 சதவீத மானியம்**

தர்மபுரி மாவட்ட விவ சாயிகள் நிழல்வலை அமைத்து காய்கறி உற் பத்தி செய்ய 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது.

பயிர்கள்ஆய்வு

தர்மபுரி மாவட்டம், பாலக் கோடு மற்றும் காரிமங்கலம் பகுதிகளில் வேளாண்மை துறையின் திட்டங்கள் மூலம் நிதியுதவி பெற்று அமைக்கப் பட்ட தோட்டக்கலை பயிர் களை மாவட்ட வருவாய் அலு வலர் சங்கர் தலைமையிலான வேளாண் அலுவலர்கள் ஆய்வு செய்தனர். மேலும் அவர்கள் விவசாயிகளிடம் பயிர்களின் தரம், விளைச்சல் குறித்து கேட்டறிந்தனர். இதனையடுத்து மாவட்ட வருவாய் அலுவலர் சங்கர் நிருபர்களிடம் கூறியதாவது:- தர்மபுரி மாவட்டத்தில் வேளாண்மை துறையின் மூலம் தோட்டக்கலை பயிர் கள் சுமார் 80 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டு வருகிறது. இதில் 48 சதவீத பரப்பளவில் காய்கறி பயிர் களும், 20 சதவீத பரப்பளவில் பழங்களும், 15 சதவீத பரப்பள வில் வாசனை பயிர்களும், 11.8 சதவீத பரப்பளவில் மலை தோட்ட பயிர்களும், 2 சதவீத பரப்பளவில் மருத்துவ பயிர் களும், 3 சதவீத பரப்பளவில் மலர் பயிர்களும் மற்றும் இதர தோட்டக்கலை பயிர்களும் பயிரிடப் பட்டுள்ளன. 50 சதவீத மானியம்

இதில் மா, மரவள்ளி, மஞ்சள், தக்காளி, கத்தரி, வெண்டை, புளி, தென்னை, சாமந்தி, சம்பங்கி ஆகியவை பிரதான பயிர்களாக சாகுபடி

செய்யப்படுகின்றன. பாதுகாக் கப்பட்ட சாகுபடி அமைப்பின் கீழ் பசுமை குடில் அமைக்க 50 சதவீத மானியத்தில் ஒரு சதுர மீட்டருக்கு ரூபாய் 467 வீதம் அதிகபட்சமாக ஒரு விவ சாயிக்கு 4 ஆயிரம் சதுர மீட் டர் வரை பசுமை குடில் அமைக்க மானியம் வழங்கப் பட்டு வருகிறது. மேலும் நிழல்வலை அமைத்து தரமான காய்கறி நாற்றுகள் உற்பத்தி செய்வதற்காகவும் 50 சதவீதம் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. அறுவடைக்கு பின் தொழில் நுட்பம் மூலம் சிப்பம் கட்டும் கூடம், பழங்கள் பழுக்க வைக் கும் கூடம், குளிர்பதன கிடங்கு, குளிரூட்டப்பட்ட வாகனம் ஆகியவற்றிற்கு விவ சாயிகள் மட்டுமின்றி வியா பாரிகளுக்கும் 40 சதவீதம் மானியம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் நடப்பாண்டு 2014-2015 தேசிய தோட்டக்கலை இயக்க திட்டம் மூலம் ரூ.4 கோடியே 28 லட்சம் மதிப்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார். இந்த ஆய்வின் போது வேளாண்மைத்துறை இணை இயக்குனர் மோகன், தோட்டக் கலைத்துறை இணை இயக்கு னர் கலைச்செல்வி, துணை இயக்குநர்கள் வேணுகோபால், வெங்கடேசன், பாஸ்கரன், சுசிலா, வேளாண்மை பொறியி யல் உதவி செயற்பொறியாளர் முருகேசன் மற்றும் வேளாண் மைத்துறை, பொறியியல்துறை, தோட்டக்கலைத்துறை அலு வலர்கள் உடனிருந்தனர்.

## <u>கரூர் மாவட்டத்தில் கட்டணம் இல்லாமல் விவசாயிகளுக்கு, பண்ணை குட்டைகள் அமைத்து தரப்படும் கலெக்டர் தகவல்</u>



கரூர்மாவட்டத்தில் கட்டணம் இல்லாமல் விவசாயிகளுக்கு பண்ணை குட்டைகள் அமைத்து தரப்படும் என்று கலெக்டர் ஜெயந்தி கூறினார்.

ஆய்வு

கரூர் மாவட்டம் குளித்தலை ஊராட்சி ஒன்றிய பகுதியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் விவசாய நிலங்களில் இலவசமாக அமைக்கப்பட்டு பயன்படுத்தி வரும் பண்ணைக் குட்டைகளை நேரில் சென்று கலெக்டர் ஜெயந்தி ஆய்வு செய்தார். அப்போது அவர் கூறியதாவது:– கரூர் மாவட்டத்தில் கடந்த 2013 – 2014–ம் ஆண்டு ரூ.2 கோடியே 83 லட்சத்தில் 388 பண்ணைக் குட்டைகள் விவசாய நிலங்களில் அமைக்கப்பட்டுள்ளன. அதே போல் 2014 – 2015–ம் ஆண்டிற்கு இதுவரை ரூ.1 கோடியே 61 லட்சத்தில் 190 பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட்டு விவசாயிகள் பயன்படுத்தி வருகிறார்கள். தற்போது மழை காரணமாக பண்ணைக் குட்டைகளில் போதியளவு தண்ணீர் தேங்கி உள்ளது. இதன் காரணமாக அருகாமையில் உள்ள ஆழ்துளைகிணறுகள் மற்றும் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளது.

பதிவு செய்து கொள்ள வேண்டும்

எனவே ஆர்வம் உள்ள விவசாயிகள் பண்ணை குட்டைகள் அமைக்க முன் வந்தால் தங்கள் விளை நிலங்களில் வந்த வித கட்டணமும் இன்றி பண்ணை குட்டைகள் அமைத்து தரப்படும். தகுதியுள்ளவர்கள் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். தொடர்ந்து குளித்தலை ஊராட்சி ஒன்றியம் இரணிய மங்கலம் ஊராட்சியில் அமைக்கப்பட்ட பண்ணைக் குட்டைகளை பார்வையிட்டு அதன் பயன்கள் குறித்து விவசாயிகளிடம் விவரம் கேட்டு அறிந்தார். தொடர்ந்து வைகைநல்லூர், இனுங்கூர், திம்மம்பட்டி பகுதி களில் உள்ள பண் ணைக் குட்டைளை பார்வை யிட்டார். அங்கு பண்ணைக் குட்டைகள் மூலம் விவசாய பணிக்கு மட்டுமின்றி கால்நடை வளர்ப்பதற்கு கால் நடைகளுக்கு தேவை யான தீவனப் புல் வளர்க்கப் பட்டு வருவதையும் பார்வையிட்டார். பண்ணை குட்டையில் மீன்கள்...

பின்னர் கிருஷ்ணராய புரம் ஊராட்சி ஒன்றியத்திற் குட்பட்ட

பிள்ளாபாளையம், மாயனூர், பாலராஜபுரம், கள்ளப்பள்ளி ஆகிய பகுதி களில் பண்ணைக் குட்டை மற்றும் அந்த பகுதியில் பண்ணை குட்டையில் மீன்கள் வளர்க்கப்பட்டு வருவதையும் பார்வையிட்டார். ஆய்வில் குளித்தலை வட்டார வளர்ச்சி அலுவலர் நாகராஜன், கிருஷ் ணராயபுரம் வட்டார வளர்ச்சி அலுவலர் ஹசினா பேகம், செய்தி மக்கள் தொடர்பு அதிகாரி பாண்டி உள்பட அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

**பழங்களின் வாசனை தரும் மனோரஞ்சிதம்**



மனோரஞ்சிதம்‘ என்பது ஒரு வகையான மலரை குறிக்கும். இம்மலரை வைத்துக் கொண்டு எந்த நறுமணத்தை மனதில் நினைத்தாலும் அந்த நறுமணம் வீசும். மலர்களுக்கே உரிய வண்ணங்களில் இல்லாமல், இலைகளைப் போலவே பச்சை அல்லது மஞ்சள் நிறத்தில் இருக்கும் இந்த மனோரஞ்சித மலர்கள் அதன் நிறத்தால் அல்லாமல் மணத்தாலே பூச்சிகளைக் கவருகின்றன. இம்மலர்க்கொடியில் பச்சைப் பாம்பு அதிகம் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

அதிக மணம் கொண்டது

மனோரஞ்சிதம் பூ பார்க்க இலை போன்றே இருக்கும், பச்சை நிற இதழ்களை கொண்ட இந்த பூவின் வண்ணம் தான் கவரக்கூடியதாக இருக்காது. ஆனால் அதன் மணம் இருமடங்கு ஈர்ப்பை ஏற்படுத்திவிடும். மணத்திற்கு புகழ் பெற்ற மலர் மனோரஞ்சிதம். இது பொதுவாக வாசனை திரவம் தயாரிக்கவும், கடவுளுக்கு படைக்கவும் பயன்படுத்தப்படுகிறது. சிறிதாய் இருக்கும் போது புதர்செடி போலவும் வளர வளர மேலேறும் கொடியாகவும் வளரும். ஒரு பாத்திரத்தில் தண்ணீர் விட்டு இம்மலரை

அதில் மிதக்க விட்டால் அந்த அறைமுழுவதும் மனோரஞ்சிதத்தின் மணம் கமழுமாம். எந்தப் பழத்தை நினைத்துக்கொண்டு இந்த பூவை முகர்கிறோமோ அந்த பழத்தின் வாசனையை மனோரஞ்சிதம் தரும் என நம்பப்படுகிறது. மதுரை மாவட்டத்தில் அதிக அளவில் இந்த பூ விளைகிறது. குறிப்பாக, திருப்பரங்குன்றத்தை அடுத்த வேடர்புளியங்குளத்தில், மனோரஞ்சிதப் பூ அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இறைவனுக்கு உகந்த பூவாகவும், வீடுகளில் அறை அலங்கார வாசத்திற்கு முதன்மை பூவாகவும் பயன்படுத்தப்படுகிறது. நல்ல மண்வளம், நீர்வளம் உள்ள இடங்களில் செழிப்பாக வளரும் தன்மை கொண்ட மனோரஞ்சிதம், இடைவெளி இல்லாமல் பலன் தரும் தன்மை கொண்ட பணப்பயிராக விவசாயிகளுக்கு வாழ்வளிக்கிறது. மற்ற எல்லா பூக்களுமே எடை விலைக்கு விற்பனை செய்யப்படும் போது, இதுமட்டும் எண்ணிக்கையின் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

<u>அதிக லாபம்</u>

இந்த பூக்களின் விளைச்சல் குறித்து விவசாயிகள் கூறியதாவது:–

தினமும் நூற்றுக்கணக்கான பூக்கள் பறிக்கிறோம். மதுரை மார்க்கெட்டில் ஒரு பூ ரூ.3 முதல் ரூ.10 வரை விற்பனையாகிறது. இந்த பூக்களை பறிப்பது என்பது சாதாரண விஷயம் அல்ல. அதன் காம்பை கிள்ளி எடுக்கும் போது அருகில் அடுத்த மொட்டு இருக்கும். அதை கவனித்து எடுக்க வேண்டும். உயரமான மரங்களில் பூக்களை பறிப்பது சிரமம்.

பழுத்த நிறத்தில் இருக்கும் பூக்களை பறித்த உடன் தண்ணீரில் போட்டு, அதன் பின்பு ஈரத்துடன் பாக்கெட்டுகளில் அடைத்து மார்க்கெட்டிற்கு அனுப்புவோம். இதன் காய்கள் பழுத்தால் மாம்பழம், கொய்யாப்பழம் போல் வாசனை வீசும். மாலை நேரத்தில் பறிக்கும் பருவத்தில் உள்ள பூக்களின் வாசம் தோட்டத்தில் நிறைந்திருக்கும். அடர்த்தியாக இந்த செடிகள் வளர்ந்திருந்தால் அதன் கீழ்பகுதிகளில் பாம்புகள் இருப்பது சகஜமானது. பூக்கள் பறிக்கச் செல்லும் போது அவை ஓடிவிடும். பிற

மலர் சாகுபடிகளை விட, இந்த மனோரஞ்சிதப்பூ சாகுபடி விவசாயிகளுக்கு லாபத்தை தரும். பதியம் செய்து நடவு செய்தால், ஒரு சில ஆண்டுகளில் பூக்கள் வரும். விதைகள் மூலம் நடவு செய்தால் நான்கு, ஐந்து ஆண்டுகளுக்கு பின் தான் பூக்கள் பூக்கும். இவ்வாறு அவர்கள் கூறினர்

## முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டம் உயர்வு: சோழவந்தான், வாடிப்பட்டி பகுதிகளில் பொங்கல் வைத்து கொண்டாட்டம்



முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் உயர்ந்ததை தொடர்ந்து சோழவந்தான், வாடிப்பட்டி பகுதியில் உள்ள பல்வேறு இடங்களில் அ.தி.மு.க.வினர் பொங்கல் வைத்து கொண்டாடினர்.

சோழவந்தான்

சோழவந்தான் ஜெனகை மாரியம்மன் கோவில் முன்பு முல்லை பெரியாறு அணை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்ந்ததை கொண்டாடும் விதத்தில் அ.தி.மு.க.வினர் பொது மக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடினர். ஒன்றிய செயலாளர் செல்லப்பாண்டி தலைமை தாங்கினார். நகரச் செயலாளர் ராமசந்திரன், பேரூராட்சித் தலைவர் பாண்டியம்மாள்ராமு ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட எம்.ஜி.ஆர் இளைஞரணி செயலாளர் வீரமாரிபாண்டி, அவைத் தலைவர் முனியாண்டி, பொருளாளர் ராஜேந்திரன், கூட்டுறவு வங்கி உதவித் தலைவர் ரெங்கநாதன் உள்பட பலர் கலந்து கொண்டனர். இதே போல் தென்கரையில் நடந்த நிகழ்ச்சியில் கிளைச் செயலாளர் திரவியம் என்ற வீரபத்திரன் தலைமை தாங்கினார். ஊராட்சி கழகச் செயலாளர் சோமு, ஒன்றிய கவுன்சிலர் பஞ்சவர்ணம், ராமலிங் கம், பாண்டியம்மாள் ராமநாதன் ஆகியோர் முன்னிலையில் இங்குள்ள உச்சி மாகாளியம்மன்

கோவிலில் பூஜை செய்யப்பட்டது. முல்லை பெரியாறு அணை 142 அடியாக உயர்வதற்கு பொங்கல் வைத்தனர். ஒன்றிய செயலாளர் செல்லப்பாண்டி, விவசாய அணி ராமு, ஊத்துக்குழி சண்முகம், நாராயணபுரம் ரவி, இளைஞரணி மதன், கண்சாமி, தண்டாயுதம், விரும்ப பிரகாஷ், அரிசிக்கடை செந்தில், சிங்கப்பூர் பாலு உள்பட பலர் கலந்து கொண்டனர். தேனூரில் ஊராட்சி கழகச் செயலாளர் சோணைமுத்து, திருவேடகத்தில் தொகுதி கழக செயலாளர் சி.பி.ஆர் சரவணன், ரிஷபம் கிராம கூட்டுறவுத் தலைவர் ராமநாதன், சித்தாலங்குடியில் பாப்பன், குருவித்துறையில் ஊராட்சி மன்றத் தலைவர் கர்ணன் ஆகியோர் தலைமையிலும் பொங்கல் வைத்து கொண்டாடினர்.

வாடிப்பட்டி

வாடிப்பட்டியில் முல்லை பெரியாறு அணையில் 142 அடி நீர்மட்டம் உயர்ந்ததையொட்டி அ.தி.மு.க. சார்பில் பட்டாசுவெடித்து இனிப்பு வழங்கி கொண்டாடினர். முல்லைபெரியாறு பாசனகால்வாய் பிரிவில் கருப்பையா எம்.எல்.ஏ, தலைமையில் பேரூர் செயலாளர் பாப்புரெட்டி, ஒன்றியத் தலைவர் அன்னகளஞ்சியம், துணைத்தலைவர் ராஜேஷ்கண்ணா, மாவட்ட திட்ட குழு உறுப்பினர் கார்த்திக், பேரூர்பேரவை செயலாளர் தனசேகரன், கவுன்சிலர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள், முன்னாள் ஒன்றியத் தலைவர், முன்னாள் பேரூராட்சி துணைத்தலைவர் உள்பட பலர் கலந்து கொண்டனர். இதேபோல வாடிப்பட்டி நீதிமன்றம் முன்பு அரசு வழக் கறிஞர் ராஜ்குமார் தலைமையில் இனிப்புகள் வழங்கப்பட்டது. வழக்கறிஞர்கள் ரெங்கநாதன், அழகர்சாமி, வெள்ளைசாமி, தியாகராஜன், கார்த்திக் உள்பட பலர் கலந்து கொண்டனர். சந்தைகேட் அருகில் தி.க. ஒன்றியதலைவர் சுப.தனபாலன் தலைமையில் பென்னிகுவிக் படத்திற்கு மாலை அணிவித்தார். முன்னாள் எம்.எல்.ஏ.ராதாகிருஷ்ணன் பொங்கல் வழங்கினார். இதில் விவசாய விஞ்ஞானி சி.ராஜேந்திரன், முன்னாள்

தலைமைஆசிரியர் கோபால், விவசாயிகள் அம்பிகை ஜெயராமன், கோபி, நெல்ஜுவா, செல்லப்பா, இளங்கோவன், அர்சுதன், முருகானந்தம் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

## <u>பாசனத்திற்காக வைகை அணையில் இருந்து கூடுதல் தண்ணீர் திறப்பு 42 அடியாக சரிந்தது</u>



ஆண்டிப்பட்டி வைகை அணையில் இருந்து பாசனத்திற்காக கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளது. இதனால் அணையின் நீர்மட்டம் 42 அடியாக சரிந்துள்ளது.

<u>வைகை அணை</u>

தேனி மாவட்டத்தில் கடந்த மாதம் தொடங்கிய வடகிழக்கு பருவமழையால் வைகை அணையை தவிர அனைத்து அணைகளின் நீர்மட்டமும் அதிகரித்தது. வைகை அணையின் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை இல்லாததால் நீர்வரத்து குறைந்தது. மேலும் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பின்படி முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் 142 அடியை எட்டுவதற்காக அணையில் இருந்து தண்ணீர் திறப்பது நிறுத்தப்பட்டது.

இதையடுத்து முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் 142 அடியை கடந்த சில தினங்களுக்கு முன்பு எட்டியது. இதனால் வைகை அணைக்கு நீர்வரத்து குறைந்து, நீர்மட்டம் 42 அடியாக சரிந்தது. இதற்கிடையே ராமநாதபுரம், சிவகங்கை மாவட்ட பாசனத்திற்காக வைகை அணையில் இருந்து கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டது.

<u>நீர்மட்டம் சரிவு</u>

அணையில் இருந்து இன்னும் 11 நாட்களுக்கு 2,572 மில்லியன் கனஅடி தண்ணீர் பாசனத்திற்காக திறக்கப்பட உள்ளது. வைகை அணையின் நீர்மட்டத்தை அதிகரிப்பதற்காக முல்லைப்பெரியாறு அணையில் இருந்து

தண்ணீரை பெற்றுக் கொள்ள பொதுப்பணித்துறையினர் திட்ட மிட்டுள்ளனர். அதன்படி முல்லைப்பெரியாறு அணையில் இருந்து வினாடிக்கு 2 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக வைகை அணைக்கு நேற்று நீர்வரத்து அதிகரித்துள்ளது. அதே நேரத்தில் பாசனத்திற்காக திறக்கப்படும் தண்ணீரின் அளவு, நீர்வரத்தை விட அதிகமாக உள்ளதால் வைகை அணையின் நீர்மட்டம் தொடர்ந்து சரிந்து கொண்டே வருகிறது. வைகை அணையை பொறுத்த வரையில் அதன் முக்கிய நீர் ஆதாரமாக விளங்கும் வைகை ஆற்றில் அதிகமான நீர்வரத்து ஏற்பட்டால் மட்டுமே அணையின் நீர்மட்டம் வேகமாக உயரும். ஆனால் வைகை ஆற்றின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இதுவரை குறிப்பிடும்படியான மழை இல்லை. வைகை அணையின் நீர்மட்டம் நேற்று காலை 6 மணி நிலவரப்படி 42.95 அடியாக காணப்பட்டது. அணைக்கு வினாடிக்கு 2,058 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்த நிலையில், பாசனத்திற்கும், குடிநீர் தேவைக்கும் சேர்த்து வினாடிக்கு 3,560 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. அணையின் மொத்த நீர்இருப்பு 1,200 மில்லியன் கனஅடியாக காணப்பட்டது.

<u>முல்லைப்பெரியாறு அணை</u>

முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் 141.25 அடியாக காணப்பட்டது. அணைக்கு வினாடிக்கு 1,005 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 2,100 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. அணையின் மொத்த நீர்இருப்பு 7,463 மில்லியன் கனஅடியாக இருந்தது.

**கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் 2–ம் போக நெல் சாகுபடி பணி தீவிரம் விவசாயிகள் உற்சாகம்**



கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் 2–ம் போக நெல் சாகுபடி பணிகளை விவ சாயிகள் உற்சாகத்து டன் தொடங்கி உள்ளனர்.

கம்பம் பள்ளத்தாக்கு

முல்லைப் பெரியாறு அணையில் இருந்து வரும் தண்ணீர் மூலம் தேனி மாவட் டத்தில் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் 14 ஆயிரத்து 707 ஏக்கர் விவசாய நிலங்கள் இருபோக பாசன வசதி பெரு கின்றன. இந்த கம்பம் பள்ளத் தாக்கு பகுதியானது லோயர் கேம்ப்பில் தொடங்கி பழனி செட்டிபட்டி வரை உள்ள பகுதிகள் ஆகும். கடந்த 2 ஆண்டுகளாக போதிய மழை பெய்யாததால் கம்பம் பள்ளத் தாக்கு பகுதிகளில் நெல் சாகுபடி பாதிக்கப்பட்டது. ஒரு போகம் விளைவிப்பதே இயற்கையோடு நடத்தும் பெரும் போராட்டமாக இருந் தது. குறிப்பாக கடந்த ஆண்டு பருவமழைகள் கைவிட்டதால், 2–ம் போக நெல் சாகுபடி செய்த நிலையில் தண்ணீர் இன்றி பயிர்கள் கருகின. இத னால் அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். இந்த ஆண்டு பருவமழைகள் கை கொடுத்ததால் முதல்போக நெல் சாகுபடி வெற்றிகரமாக முடிந்துள்ளது.

2–ம் போக சாகுபடி

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 142 அடியாக உயர்ந்து உள்ளதால், 2–ம் போக நெல் சாகுபடிக்கும் பிரச்சினை ஏற்பட வாய்ப்பு இல்லை என்று விவசாயிகள் கருதுகின்ற னர். இதனால் முதல்போக அறுவடை பணி முடிந்த கையோடு, இரண்டாம் போக சாகுபடியில் விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டு உள்ள னர். தேனி அருகே உள்ள வீரபாண்டி, பழனி செட்டி பட்டி பகுதிகளில் முதல்போக நெல் அறுவடை பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டி உள்ளது. இதனை தொடர்ந்து 2–வது போக சாகுபடி பணி களை விவசாயிகள் தொடங்கி உள்ளனர். அறுவடை செய்த வயல்களில் உழவுப் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. உத்தமபாளையம் பகுதியில் விவசாயிகள் கடந்த 15 நாட் களுக்கு முன்பே நாற்று விதைப்பு பணிகளை மேற் கொண்டனர். அத்தகைய இடங்களில்

நெல் நாற்றுகள் நன்கு வளர்ந்து உள்ளன. டிராக்டர், மாடுகள் மூலமாக உழவுப்பணி நடந்து வருகிறது. இன்னும் ஓரிரு நாட்களில் கம்பம் பள்ளத்தாக்கு பகுதிக ளில் எஞ்சிய இடங்களிலும் நெல் அறுவடை பணிகள் முடி வடைந்து, நாற்று நடவு பணிகள் தீவிரம் அடையும்.

## <u>நெல்லை மாவட்டத்தில் பலத்த மழை: 2414 குளங்கள் நிரம்பின</u>



நெல்லை மாவட்டத்தில் பெய்து வரும் பலத்த மழையால் இதுவரைக்கும் 2,414 குளங்கள் நிரம்பி உள்ளன.<u>பருவமழை தீவிரம்</u>

நெல்லை மாவட்டத்தில் வடக்கு கிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து உள்ளது. மாவட்டத்தின்அனைத்து பகுதிகளிலும் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் அணைகள், குளங்கள் வேகமாக நிரம்பி வருகின்றன. தாமிரபரணி ஆற்றிலும் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. இந்த நிலையில் நேற்று மாவட்டத்தில் மழை இல்லை. காலையில் இருந்து வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. அவ்வப்போது லேசான சாரல் மழை பெய்தது.

<u>வீரவநல்லூர்</u>

வீரவநல்லூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் நேற்று மதியம் லேசான மழை பெய்தது. கடந்த சில நாட்களாக பெய்த மழையால் வீரவநல்லூரில் இருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள 30 அடி கொண்ட வண்டல்ஓடை அணை நிரம்பி உள்ளது. அணை திறக்கப்பட்டு, மணிமுத்தாறு பிரதான கால்வாயில் தண்ணீர் விடப்பட்டு உள்ளது. மேலும் அணையில் மறுகால் வழியாக தண்ணீர் செல்வதால் மலையான்குளம் ஆற்றில் இருந்து கோதையாறு வழியாக தண்ணீர் வீணாக தாமிரபரணி ஆற்றில் கலக்கிறது. எனவே மறுகால் வழியாக செல்லும் தண்ணீரை மணிமுத்தாறு பிரதான கால்வாய் வழியாக திருப்பி

விட வேண்டும். இதனால் கங்கனாங்குளம், ஓடைக்கரை, கரிசல்பட்டி ஆகிய பகுதிகளில் உள்ள குளங்களுக்கு தண்ணீர் பெருகி விவசாயிகள் பயன்பெறுவார்கள் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

குற்றாலம் அருவி

மேலும் திசையன்விளை, இட்டமொழி, ராதாபுரம், ஏர்வாடி ஆகிய பகுதிகளில் மாலையில் லேசான மழை பெய்தது. குற்றாலத்தில் அனைத்து அருவிகளிலும் தண்ணீர் விழுகிறது. மாவட்டத்தின் இதர பகுதியான தென்காசி, செங்கோட்டை, பாவூர்சத்திரம், சுரண்டை, மானூர், கடையம், பேட்டை ஆகிய பகுதிகளில் நேற்று மழை பெய்யவில்லை. வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. அவ்வப்போது வெயில் முகம் தெரிந்தது.

நாங்குநேரி

மணிமுத்தாறு அணையில் இருந்து வரும் தண்ணீர் மூலம் நாங்குநேரி, ராதாபுரம், சாத்தான்குளம் வரை 4 ரீச் கால்வாய் பாசனம் நடைபெற்று வருகிறது. 1–வது ரீச் சீரான்குளத்தில் இருந்து வில்வராபன் குளம் வரை 67 குளங்களும், 2–வது ரீச் சடைமான்குளத்தில் இருந்து அய்யனார்குளம் வரை 74 குளங்களும், 3–வது ரீச் வீரகேரளம்பேரி குளத்தில் இருந்து பெட்டைகுளம் வரை 93 குளங்களும், 4–வது ரீச் உன்னங்குளத்தில் இருந்து விஜயநாராயணம் வரை 74 குளங்கள் என மொத்தம் 308 குளங்கள் உள்ளன. இவற்றில் தலா 2 ரீச்களுக்கு மட்டும் ஒவ்வொரு ஆண்டும் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படும்.

2414 குளங்கள் நிரம்பின

இந்த நிலையில் இந்த ஆண்டு எந்த ரீச்சிலும் இதுவரை தண்ணீர் திறக்கப்படவில்லை. தற்போது பெய்த உள்ள பருவமழையால் நேற்று வரை 4 ரீச்களில் உள்ள 300 குளங்கள் முழுமையாக நிரம்பிவிட்டன. இதர குளங்கள் நிரம்பும் நிலை ஏற்பட்டு உள்ளது. விஜயநாராயணம் பெரியகுளம் நிரம்பிவருகிறது. நாங்குநேரி, ராதாபுரம் தாலுகாவில்

பெரும்பாலான குளங்கள் நிரம்பினாலும், வள்ளியூர் குளம் இன்னும் நிரம்பவில்லை. சேரன்மாதேவி அருகே உள்ள பிராஞ்சேரி குளம் நிரம்பி உள்ளது. நெல்லை மாவட்டத்தில் மானாவாரி குளங்கள் ஆயிரத்து 528 குளங்களும், கால்வரத்து குளங்கள் 921 என மொத்தம் 2 ஆயிரத்து 449 குளங்கள் உள்ளன. சமீபத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் மானாவாரிகுளங்களில் ஆயிரத்து 493 குளங்கள் நிரம்பி உள்ளன. 35 குளங்களுக்கு தண்ணீர் வரத்து இல்லை. கால்வரத்து குளங்கள் அனைத்தும் நிரம்பி விட்டன. நெல்லை மாவட்டத்தில் தற்போது வரை மொத்தம் 2 ஆயிரத்து 414 குளங்கள் நிரம்பி உள்ளன.

<u>மழை அளவு</u>

நெல்லை மாவட்டத்தில் நேற்று முன்தினம் பல்வேறு ஊர்களில் பரவலாக மழை பெய்தது. நேற்று காலை 8 மணி வரை பதிவான மழை அளவு (மி.மீட்டரில்) வருமாறு:–

அம்பை– 6

சேரன்மாதேவி– 3

நாங்குநேரி– 4

பாளையங்கோட்டை– 7.2

ராதாபுரம்– 15

சங்கரன்கோவில்– 19

செங்கோட்டை– 2

சிவகிரி– 8.9

தென்காசி– 1.8

நெல்லை– 6

ஆலங்குளம்– 1.6

வீரகேரளம் புதூர்– 1

**<u>பாபநாசம் அணை 130 அடியை தாண்டியது மணிமுத்தாறு அணையில் ஒரே நாளில் 5 அடி உயர்வு</u>**



விக்கிரமசிங்கபுரம், பாபநாசம் அணை நேற்று 130 அடியை தாண்டியது. மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 5 அடி உயர்ந்தது.

<u>நீர்வரத்து அதிகரிப்பு</u>

நெல்லை மாவட்டம் விக்கிரமசிங்கபுரம் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் பலத்த மழை பெய்து வருகிறது. அணைகளின் நீர்ப்பிடிப்பு மற்றும் நீர்வரத்து பகுதிகளிலும் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. நேற்று பாபநாசம் அணைப் பகுதியில் 70 மில்லிமீட்டர் மழை பதிவானது. மேலும் நீர்ப்பிடிப்பு மற்றும் நீர் வரத்து பகுதிகளில் இருந்து சுமார் 5 ஆயிரம் கன அடி தண்ணீர் பாபநாசம் அணைக்கு வந்து கொண்டு இருக்கிறது. நேற்று முன்தினம் 124.50 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம், நேற்று காலை 7 மணி நிலவரப்படி 5 அடி உயர்ந்து 129.35 அடியாக அதிகரித்தது. காலை 11 மணி அளவில் 130 அடியை தாண்டியது. கடந்த 4 ஆண்டுகளுக்கு பிறகு முதல்முறையாக நேற்று பாபநாசம் அணை 130 அடியை தாண்டுகிறது. கீழ் அணையில் 64 மில்லிமீட்டர் மழை பதிவாகியது. பாபநாசம் அணை நிரம்ப சுமார் 10 அடியே தேவைப்படுகிறது. மற்றொரு அணையான சேர்வலாறு அணை 139.99 அடியில் இருந்து 145.01 அடியாக உயர்ந்துள்ளது. இங்கு 42 மில்லிமீட்டர் மழை பதிவானது.

<u>4,576 கனஅடி தண்ணீர்</u>

மற்றொரு அணையான மணிமுத்தாறு அணைக்கு எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு, இந்த ஆண்டு 4,576 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. இதனால் 87.90 அடியாக அணையின் நீர்மட்டம் நேற்று காலை 7 மணி நிலவரப்படி 92.85 அடியாக உயர்ந்தது. அங்கு 45.8 மில்லிமீட்டர் மழை பதிவானது. அம்பையில் 34.2 மில்லிமீட்டர் மழையும், கல்லிடைக்குறிச்சியில் 44 மில்லிமீட்டர் மழையும், சேரன்மா தேவியில் 36 மில்லிமீட்டர் மழையும் பதிவானது. பாபநாசம், மணிமுத்தாறு, சேர்வலாறு ஆகிய 3 அணைகளிலும் நேற்று ஒரே நாளில் 5 அடிக்கு மேல் தண்ணீர் உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. நீர்ப்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் கூடிய விரைவில் சேர்வலாறு அணை நிரம்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.